**வலப்பனை பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலப்பனை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலப்பனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் ப.ந்தியின் (அ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ஊழியர் கடன் மீதி ரூபா. 122,415 குறைத்து காண்பித்த தவறு மீளாய்வாண்டில் சரி செய்யப்படவில்லை. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஊழியர் கடன் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 125,000 பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பேரேட்டின் பிரகாரம் வழங்கல் மற்றும் உபகரணங்களின் செலவினம் ரூபா. 3,621,902 ஆக இருந்த போதிலும், வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் ரூபா. 3,943,359 ஆகக் ரூபா. 321,457 அதிகமாக காட்டப்பட்டுள்ளது, | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 204,624 தொகையான சேதன உரம் கையிருப்பாக இருந்த போதிலும், அது ரூபா. 356,900 ஆக ரூபா 152,276 தொகை அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒவ்வொரு தலைப்பின் கீழும் மொத்த மூலதன சொத்து பழுதுபார்ப்பு | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

செலவினங்களின் மொத்தம் ரூபா 2,628,357 ஆக இருந்த போதிலும், வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் ரூபா. 2,160,801 ஆக ரூபா . 498,996 தொகை அதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| .நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய அண்மித்த அறிக்கைகள் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 3,253,768 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் உரிய அட்டவணை களுடன் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3. கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 05 விடயங்களுக்குரிய ரூபா 1,161,428 தொகைக்கான நிர்மாண கோவைகள் / பதிவேடுகளுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துதற்கு உரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்து பேணப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| (i) | 52 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் இனங் காணப்பட்டிருந்த 38 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய நிர்மாணங்களுக் காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |
| ii | 93 முதல் 95 ஆம் வரையான பிரிவுகள் | சபை அதிகாரப் பிரதேசத்தில் அனைத்து மலசல கூடங்கள், மலசல குழிகள் என்பவற்றை உரிய கால எல்லைக்குள் முறையாக சுத்திகரிப்பதற்காக | கலி வண்டி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகளை எடுத்து தருமாறு | பொது மக்கள் சேவையை முறையாக பராமரித்துச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கலி வண்டி சேவையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பானவர் களுக்கு கடிதங்கள் மூலம் பல சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடுக்கப்பட்ட பொதும் இதுவரை கிடைக்கவில்லை என்பதாக. | செல்லல் வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| i | நி.பி 189 | 2016 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து வரும் ரூபா 242,999 பெறுமதியான 23 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான எதிர்வரும் நடைமுறைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிழந்த காசோலைகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| ii | நி.பி. 571(3) | 2014 ஆம் ஆண்டு முதல் 2020 வரையான காலப் பகுதிக்குரிய மொத்தம் ரூபா 795,446 காலாவதியான 15 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |
| **(இ)** | **உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| | 1988 மே 17 திகதிய 1988/22 இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்கான சொத்துக்களின் மதிப்பீடு 05 வருடங்களுக்கொரு முறையேனும் மேற் கொள்ளப்பட வேண்டியிருந்த போதும், பிரதேச சபை 2011 ஆண்டின் வீதவரி மதிப்பீட்டின் பின்னர் புதிய மதிப்பீடொன்றினை மேற்கொண்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மதிப்பீட்டுந. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் அறிக்கைகளைப் பெற்று வீதவரி அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,970,554 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,403,905 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,782,000 | 7,596,628 | 8,032,092 | 2,573,493 | 3,027,000 | 5,401,063 | 5,658,278 | 3,008,958 |
| (ii) | வாடகை | 5,194,700 | 2,135,486 | 1,795,407 | 9,013,682 | 10,885,500 | 4,320,795 | 3,757,022 | 8,673,602 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,680,000 | 4,515,999 | 4,515,999 | - | 3,974,000 | 3,898,359 | 3,898,359 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 17,930,000 | 15,751,224 | 6,953,719 | 11,933,004 | 8,500,000 | 3,055,990 | 9,370,627 | 3,135,499 |
| | | 33,586,700 | 29,999,337 | 21,297,217 | 23,520,179 | 26,386,500 | 16,676,207 | 22,684,286 | 14,818,059 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 14,818,059 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிலுவை வருமானம் ரூபா .23,802,066 ஆக இருந்ததால் 61 சதவீதத்தினால் நிலுவை வருமானம் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் வருமான சேகரிப்பின் செயலாற்றல் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதில் விசேட நிகழ்ச்சியொன்றை செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) வீதவரியும் வரியும்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,442,801 ஆன நிலுவை வீதவரி மீதியில் 01 இற்கு 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக 36 வீதவரி வளவுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 195,157 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 60 வளவுகளில் இருந்து | வீதவரி அறவீடு நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா 80,214 தொகையும் பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |

**(இ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| i. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,456,253 கடை வாடகை நிலுவையில் 03 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் 10 கடைகளிலிருந்து ரூபா 2,640,005 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 16 கடைகளிலிருந்து ரூபா 1,827,498 ஆன மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலத்தின் உரிமையைப் பெறுவதில் உள்ள சிக்கல் காரணமாக ராகல கடைகளுக்கான வாடகையை வசூலிக்க முடியாமல் உள்ளது. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| ii | சபை அதிகார பிரதேசத்தில் 2001 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் குத்தகைக்கு விடப்பட்ட 06 இறைச்சி மற்றும் மீன் கடைகளிலிருந்து ரூபா 361,855 நிலுவைத் தொகையும், 1987 முதல் 2001 வரையிலான காலப்பகுதியில் குத்தகைக்கு விடப்பட்ட 19 இறைச்சி மற்றும் மீன் கடைகளிலிருந்து ரூபா 887,934 நிலுவைத் தொகையும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் இல்லாததால் வசூல் சிக்கலாகி விட்டதாகவும், அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும். | குத்தகைதாரர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு நிலுவைத் லருமானங்களை அறவிட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| i | வலப்பனை மற்றும் ராகல வாரச்சந்தையை குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 566,207 குத்தகை தொகை 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்ததுடன் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | விடயங்கள் விசாரிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| ii. | சபைப் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள வாகன நிறுத்துமிடங்களின் குத்தகைதாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையான ரூ. 227,500 தொகை 04 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| iii | மீளாய்வாண்டின் இறுதியில், குத்தகைக்கு வழங்கப்பட்ட 02 பொது கழிப்பறை களிலிருந்து வாடகையாக ரூபா. 688,200 தொகையான வாடகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| **(உ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உளளவாறு ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 873,664 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,059,340 ஆக இருந்தது. | நினைவூட்டல்களை அனுப்பி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**<br>பதியபெலல்ல பொது மலசலகூட முறைமைப்பை நிர்மாணிப்பதற்காக , 2023 மார்ச் 27 ஆம் திகதிய RDA/RXJM/RE/02-Com/09/01 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்ட பொறியாளரின் கடிதத்தின் மூலம் ரூபா. 2,350,000 சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய பொது மலசலகூட முறைமைப்பை மீளாய்வு ஆண்டின் இறுதி திகதி வரைடப்படவில்லை மற்றும் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இந்தத் தொகையை எதிர்காலத்தில் செலவிடப்படும் என்றும், எதிர்பார்த்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் | இந்தத் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.. |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| .(அ) | 2022 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பின் போது அடையாளம் காணப்பட்ட ரூபா. 2,034,735 | இது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் 104(4) | விசாரணை நடத்தப்பட்டு சேதங்களை |

| | | |
|---|---|---|
| பெறுமதியான 1½ அங்குல 300 GI குழாய்கள் (தடிப்பு 1.2 மில்லி மீற்றர்) பற்றாக்குறை குறித்து பொறுப்பான தரப்பினர் அடையாளம் காணப்பட்டு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை | விசாரணை நடத்தப்பட்டு வருவதாக. | மீட்டெடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையில் சேவை புரிந்து ஆகஸ்ட் 2016 இல் ஓய்வு பெறவிருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு, அந்த திகதியிலிருந்து 2018 மார்ச் வரை 18 மாதங்களுக்காக மொத்தம் ரூபா. 752,400 தொகையான சம்பளம் வழங்கியமை தொடர்பாக நி.பி 104 (4) இன் கீழ் விசாரணை நடத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பரிந்துரைகளின் பிரகாரம் பொறுப்பான தரப்பினரிடமிருந்து நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நி.பி 104 (4) பரிந்துரைகளின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | தொடர்புடைய விசாரணைகளை நடத்தி எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள், சபை சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் பயன்படுத்தாமல் ˙ ரூபா 38,110,996 கூட்டுத்தொகையான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில், பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கும் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதாக. | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் பணிபுரிந்த ஒரு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 3,650,000 சம்பள மோசடி தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊழியர் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட போதிலும், அந்த உத்தியோகத்தருக்கு எதிராக தொடங்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணை செயல்முறை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த விசாரணை மத்திய மாகாண தலைமைச் செயலகத்தால் நடத்தப்படுவதாக. | விசாரணை முடிந்ததும் ஒழுக்காற்றல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில், சபைக்குச் சொந்தமான 06 கடைகளைக் கொண்ட பழைய கட்டிடம் ரூபா 1,713,500 செலவில் புதுப்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நீர் மற்றும் மின்சார வசதிகள் வழங்கப்படாததால் அதைப் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. | புதிய மதிப்பீடு ஒன்று பெறப்பட்டு அதற்கான கேள்வி கோரி வழங்கப்படும் என்பதாக. | தேவையான வசதிகளை வழங்கிய பிறகு கடைகளை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். |

.

## 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் மொத்தம் 16 வாகனங்கள் மற்றும் ரூபா 10,673,080 பெறுமதியான 04 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் செயலற்றதாகவோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படாமலோ இருந்தன. | பழுதுபார்க்க வேண்டிய வாகனங்களை பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்பதாக. | வாகனங்களை பழுதுபார்த்து பயன் படுத்துவதற்கும், கைதவிர்க்க வேண்டிய வேண்டிய வாகனங்களை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 09 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/வெவ்வேறு ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம், பொருளாதார சிரமங்களைக் கொண்ட பாடசாலை பிள்ளைகளுக்கு உதவி வழங்குவதற்காக ரூபா. 2,750,000 செலவில் வாங்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் நோக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறான அலுவலக வளாகத்தில் விளைவற்ற வகையில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன. | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | பாடசாலை உபகரணங்களை நோக்கத்திற்குட்படுத் திய செயற்பாடுகளுக்காக விரைவில் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | வலப்பனை நகரில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சதோச வியாபார கட்டிடத்தின் முதல் மாடியில் உள்ள கடையொன்று 2015 ஆம் ஆண்டிலிருந்தும் நில மாடியில் உள்ள 367 சதுர அடி அளவிலான கடையொன்று 2020 ஜூன் முதலும் மூடப்பட்டு விளைவற்று காணப்படுகின்றது. | ஆராய்ந்து பார்த்து நடைமுறைகளை எடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கடைகளை செயற்திறனாக திறம்பட பயன்பாடிற்கு எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 19 பதவிகளில் 39 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணி மீளாய்வொன்று இடம்பெறுவதால் புதிய ஆட்சேர்ப்பொன்று இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதாக. | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலையில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட 31 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா .1,265,032 தொகை ˙ மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் அறவிடப்பட வேண்டும். |